IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 100/2018

Deposition of Witness : DW 2

Name : அகஸ்டின் (வயது – 58)

Father's Name /W/o : த/பெ சாமுவேல்

Religion : கிருத்துவர்

Caste : –

Calling : –

Address : சிறுணமல்லி

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 28.11.2025.

## குறுக்கு விசாரணை

1. நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. யார் சொல்லி நான் வந்தேன் என்றால் பிரதிவாதி அழைத்ததால் வந்தேன். பிரதிவாதி சொல்லி தான் எனக்கு வழக்கு விபரங்கள் தெரியுமா என்றால் ஆம். எனக்கு நேரடியாக வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் பற்றி தெரியாது என்றால் சரிதான். வாதியின் தந்தை செட்டில்மெண்ட் எழுதிய விபரம் எனக்கு தெரியும் என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டேனா என்றால் இல்லை.

2. மேற்படி ஆவணத்தில் எந்த சர்வே எண் மற்றும் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு சொத்து எழுதி வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். எனவே எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் மற்றும் எந்த சர்வே எண்ணுக்கு எழுதி வைத்தார் என்ற விபரம்

எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பெயரில் தான் நான் சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.